பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 28 வியாழக்கிழமை (10-06-1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 194

# அரசு யுத்த நிறுத்தம் செய்தாலே பேச்சுவார்த்தைக்கு வழி பிறக்கும்

## வெளிநாட்டு சமாதானக் குழுவிடம் புலிகள் பிரதிநிதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

- ★ அரசாங்கம் யுத்த நிறுத்தம் செய்தாலே, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வழிபிறக்கும்.
- ★ நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் தயாராக உள்ளோம்.
- ★ அரசாங்கம் உண்மையிலேயே சமாதானத்தை விருமபுகிறதென்றால், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க விரும்புகிறதெனின் அதற்குரிய சமிக்ஞைகளைக் காட்ட வேண்டும்.

வெளிநாட்டு சமாதனக் குழுவினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது புலிகள் தரப்பில் மேற்கண்டவாறு விளக்கப்பட்டது.

சமாதானத்தைக் கொண்டு வருவதற்குப் பேச்சுவார்த்தை அவசியம் என்றும் அது குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்னவென்றும்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## காவலிலுள்ள பொலீஸாரை தூதுக் குழுவினர் சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். வந்துள்ள வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழுவினர், விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள பொலீஸாரை இன்று சந்திப்பர் எனத் தெரியவந்தது.

வெளிநாட்டு சமாதானத் தூதுக் குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று நடந்த சந்திப்பின் போது —

காவலில் உள்ள பொலீஸாரை அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை எனவும், அதற்கான அறிவிப்பை தாம் ஏற்கனவே விடுத்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கைதிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில், பொலீஸாரை விடுதலை செய்ய தாம் தயார் என்று விடுதலைப் புலிகள் மீண்டும் வலியுறுத்திக் கூறினர். [ஓ-6]

## இன்று மீண்டும் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ் வந்துள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதி திரு. பீற்றர் நிக்கலஸ் பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக இன்று காலை மீண்டும் விடுதலைப் புலிகள் பிரமுகர்களை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

பேச்சுக்களை முடித்துக் கொண்டு இன்று அவர் கொழும்பு திரும்புவார் என் எதிர்பார்க்கப்படுகிறது.

# பொலீஸாரை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

## நாடாளுமன்றில் அமைச்சர் விமல் நேற்று தகவல்

கொழும்பு, ஜூன் 10

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 38 பொலீஸாரையும் இராணுவச் சிப்பாயையும் விடுவிக்க சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது.

அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி எம். பி. ரிச்சர்ட் பதிரான எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் பொலீஸாரும், இராணுவச் சிப்பாயும் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவித்திருப்பது தெரிந்ததே. (ஓ-எ)

# இலவச நூல், மதிய உணவு நிறுத்துவதற்கு ஆலோசனை

## சர்வதேச நாணய நிதியத்திற்கு பணிந்தது அரசு

கொழும்பு, ஜூன் 10

பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகம், மதிய உணவு வழங்கல் போன்ற நலன்புரிச் சேவைத் திட்டங்களை நிறுத்துவதற்கு அரசு ஆலோசித்து வருவதாகவும்—

ஜனசவிய திட்டத்திற்கான செலவைக் குறைப்பதும் இதில் அடங்கும் என்றும்—

மண்ணெண்ணெய், டீசல், மா போன்றவைக்கான மானியமும் வெட்டப்படவுள்ளன என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

செலவைக் குறைத்து வரவு—செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையைச் சீர் செய்யும் நோக்குடன் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட இணக்கத்திற்கு அமைவாகவே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரச மற்றும் தூதரக வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ரோய்ட்டர்' ஸ்தாபனம் அறிவித்துள்ளது

இது சம்பந்தமான ஆலோசனைகள் இன்று கூடும் அமைச்சரவைக் கூட்டத்திலே ஆராயப்படவுள்ளது என அவ்வட்டாரம் கூறும்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## கிழிக்கப்பட்ட நிலையில் மீண்டும் கடிதங்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் மீண்டும் கிழிக்கப்பட்ட நிலையில் வந்து சேர்ந்துள்ளன.

'குமாரி' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட 700 தபால் பொதிகளில் யாழ். பிரதம தபாலகத்துக்குரிய பொதிகள் விநியோகத்திற்காக நேற்று பிரிக்கப்பட்டபோது அவற்றில் இருந்த வெளிநாட்டுக் கடிதங்கள் பெரும்பாலும் கிழிக்கப்பட்டு உரியவர்களுக்கு விநியோகிக்க முடியாத நிலையில் காணப்பட்டன,

ஆயிரக்கணக்கான வெளிநாட்டுக் கடிதங்கள் கிழிக்கப்பட்டிருப்பதால் அவற்றை விநியோகிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கைதாவது குறித்து தமிழ்க்கட்சிகள் முறையீடு

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு நகரில் பெண்கள் உட்பட பல தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளது குறித்து ஏழு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் முறையிட்டுள்ளனர்.

காரணம் இன்றி தமிழர்கள் கைது செய்யப்படுவதாக இந்த ஏழு தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் பிரதமரிடம் முறையிட்டுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவர்களுக்குப் பதில் அளிக்கையில், பாதுகாப்புப் படையினரை தமிழ் அரசியல் கட்சிகள் சந்திப்பதற்கு தாம் ஏற்பாடுகளைச் செய்வதாகத்

( 7ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். ஆஸ்பத்திரிக்குரிய

## பிரிட்டிஷ் உபகரணங்கள் விரைவில் அனுப்பப்படும்

கொழும்பு, ஜூன் 10

பிரிட்டிஷ் அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்டு தற்போது வெலிசறையில் வைக்கப்பட்டுள்ள வைத்திய உபகரணங்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜே. பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என பெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

''ஸ்கானிங்'' யந்திரம் [Cat Scanning] உட்பட பல நவீன வைத்தியக் கருவிகளை உள்ளடக்கிய இந்த உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினால் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு சிகிச்சை அளிக்கவே அவை பயன்படுத்தப்படும் என பாதுகாப்பு அதிகாரிகள் அச்சம் தெரிவிப்பதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் டாக்டர் ஜே. பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த உபகரணங்களை கொழும்பில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும்—

சுங்கப் பரிசோதனையின் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் அவற்றை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும் டாக்டர் பெர்னாண்டோ தெரிவித்தார்.

[முன்வந்த மற்றும் இரு செய்திகள் 3 ஆம் பக்கத்தில்]

### பாபா கொலை முயற்சி:

## விஜய் பிரபு என்பவரே சூத்திரதாரியாம்

### பொலீஸார் தீவிர தேடுதல்

பெங்களூர், ஜூன் 10

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா கொலை முயற்சிச் சம்பவத்தின் சூத்திரதாரி என்று அடையாளங் காணப்பட்ட விஜய்பிரபு என்பவரை கைது செய்ய பொலீஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிறு இரவு பாபா தங்கியிருந்த இடத்துக்குச் சென்று அவரை கொல்ல முயற்சித்த சமயத்தில் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட நான்கு இளைஞர்களில் ஒருவரின் சகோதரரே விஜய்

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1000க்கு மேற்பட்ட புத்திசாலிகளின் வரிசையில்.....
நீங்களும் இடம்பெற விரும்புகிறீர்களா?

# நவீன தொழில் நுட்பத்துடனான இரட்டைச் சூட்டடுப்புக்கள்

விறகுத் தட்டுப்பாடு —
விறகு விலையேற்றம் - போன்ற
பிரச்சினைகளுக்கு தீர்வு காண

இதோ!

## இரட்டைச் சூட்டடுப்பு



★ உடனடிப்பலன் தருவதால் இப்போது குடா நாடெங்கும் வெகுவேகமாக கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

● சமையலின் போது கரியில்லாத, புகையில்லாத இந்த நவீன இரட்டைச் சூட்டடுப்புக்கள் உங்கள் சமையலின் நேரத்தை மீதமாக்குகின்றன.

◙ ஊதாமலே எரிவதுடன் தீப்பொறிகள் விறகு வீழ்தல் போன்றவற்றிலிருந்து உங்களுக்கு பாதுகாப்பினைத் தருகின்றன.

◙ விறகுக்கான செலவில் 50% மீதப்படுத்தும் இரட்டைச் சூட்டடுப்புக்களை,

★ வீடுகள்
★ உணவுச் சாலைகள்
★ பாடசாலை விடுதிகள்
★ கோயில் மடங்கள்

போன்ற எந்த இடமாக இருந்தாலும் கட்டிப் பயன் பெறலாம்.

## எனவே எதற்கும் யோசிக்காமல்

★ நீங்கள் செய்ய வேண்டியது மிகச் சுலபமான ஒரே ஒரு செயற்பாடு தான்
★ பின்வரும் நிறுவனங்கள் ஏதாவது ஒன்றில் உங்கள் பெயர் விலாசத்தினையும் எந்தத் திகதியில் அடுப்பு கட்டித்தரப்படவேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள்.
★ அந்தத் திகதியில் இரட்டைச் சூட்டடுப்பு உங்கள் வீட்டுக்கு வந்து விடும்.

தொடர்பு முகவரிகள்:

சக்திப் பகுதி,
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்,**
காங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி,
தாவடி.

சுண்ணாம்பு விற்பனை நிலையம்,
உட்கட்டுமானப் பகுதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

உதவும் கரங்கள்,
ஆர்ச்சனா வீதி, (ஸ்ரான்லி வீதி),
யாழ்ப்பாணம்.

யாழ். மாவட்டம்,
மாவட்ட அலுவலகம்,
த. பொ. மே. கழகம்,
யாழ் மாவட்டம்,
கோண்டாவில்.



### வலிகாமம்

★ கோட்ட இணைப்பாளர் அலுவலகம்,
வலிகாமம் கோட்டம்
புத்தூர் வீதி, சுன்னாகம்.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(கோப்பாய்)
சுன்னாகம் வீதி,
புத்தூர் சந்தி, புத்தூர்.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(உடுவில்)
மானிப்பாய் வீதி,
மதவடி, உடுவில்.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(சண்டிலிப்பாய்)
கட்டுடைச் சந்தி,
மானிப்பாய் மேற்கு.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(சங்கானை)
பிரதான வீதி, சங்கானை.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
நல்லூர், பொற்பதி வீதி,
கொக்குவில், நல்லூர்.

### வடமராட்சி

★ கோட்ட இணைப்பாளர் அலுவலகம்,
வடமராட்சிக் கோட்டம்,
மாலு சந்தி, நெல்லியடி.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(பருத்தித்துறை)
சந்தமுருகேசனார் சிலையடி,
பிரதான வீதி' மந்திகை.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(கரவெட்டி)
யாழ். வீதி,
நெல்லியடி, கரவெட்டி

### தீவகம்

★ கோட்ட இணைப்பாளர் அலுவலகம்,
தீவகக் கோட்டம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(தீவகம்)
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### தென்மராட்சி

★ கோட்ட இணைப்பாளர் அலுவலகம்,
தென்மராட்சிக் கோட்டம்,
கொடிகாமம்.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(பளை)
பளை நகரம்; பளை.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(சாவகச்சேரி)
இலங்கை வங்கி அருகாமை,
பிரதான வீதி, சாவகச்சேரி.

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்
(கொடிகாமம்)
கோட்ட செயலகம்,
கொடிகாமம்

★ வட்டத் தொடர்பாளர் அலுவலகம்,
(கைதடி)
ஆயுள்வேத வைத்தியசாலை
முன்பாக,
கைதடி தெற்கு, கைதடி.

கடற்புலிகள் மாவட்டம்

கோகுலம்,
கால்நடை உணவு உற்பத்தி நிலையம்,
ஊறணி, வல்வெட்டித்துறை.

நிறுவனங்கள்

முகாமையாளர்
காமதேனு விவசாயக் கால்நடை பண்ணை,
சுன்னாகம்.

முகாமையாளர்
மதுரம் பேக்கறி,
பலாலி வீதி, உரும்பராய்.

முகாமையாளர்
தேன் துளி,
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

முகாமையாளர்
லெப். செங்கண்ணன்
விளைபூமிப் பண்ணை,
நீர்வேலி.

முகாமையாளர்
காமாட்சி இரும்புத் தொழிலகம்,
நீர்வேலி,

முகாமையாளர்
உதயம் அங்காடி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-5232)


## நாளை

மயிலணி, ஜூன் 10

மருதனார்மடம் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(இ-5-89)

o o o

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நெல்லியடி மகா வித்தியாலய பிரதி அதிபர் திரு. கி. நடராசா ''நக்கீரரும் திருமுருகாற்றுப் படையும்'' எனும் பொருளில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்துவார்.

(க)

## இனப்பிரச்சினை பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். பல்கலைக்கழகத்துக்கு சமீபமாக உள்ள ஈவ்லின் இரட்ணம் பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனத்தில் இன்று மாலை 4 மணிக்கு ''இலங்கையின் இனப்பிரச்சினையும் பிரதிநிதித்துவமும்'' என்ற கருத்தரங்கு நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை உதவி விரிவுரையாளர் திரு வி கிருஷ்ண மோகன் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் யாழ் கல்லூரி பொருளியல் துறை வெளிநிலை விரிவுரையாளர் திரு. அ. குமாரவேலு உரை நிகழ்த்துவார்.

(இ 162)

## ஆலயங்களில்

வட்டுக்கோட்டை மேற்கில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு முருகையா ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகத்துடனும் மகேஸ்வர பூசையுடனும் நிறைவுறும். (க)

o o o

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் சங்காபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும்

அன்று பிற்பகலில் பிரம்மஸ்ரீ அ சண்முகரத்தின சர்மாவுக்கு ''அநுபூதிச் செம்மல்'' என்னும் பட்டமளித்துக் கௌரவிக்கும் வைபவம் இடம் பெறும்.

(அ-28)

o o o

இணுவில் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவ தெய்வீக இசை அரங்கில் இன்று இரவு 7.30 மணிக்கு திரு போல் திலகநாயகம் இன்னிசை விருந்தளிப்பார்.

(அ-3)

o o o

யாழ். வண்ணை கண்ணாதிட்டி அருள்மிகு காளியம்மன் ஆலய கும்பாபிசேக தின சங்காபிசேகம் இன்று நடைபெறுகிறது. (அ-15)

o o o

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்று ஆரம்பமானது. ''மெய்ஞ்ஞான வாரிதி'' குமாரசாமி சண்முகநாதன் தொடர்ந்து 25 நாட்களுக்கு நிகழ்த்தவிருக்கும் 'சிவ சக்தி மகிமை' சொற்பொழிவுத் தொடர் ஆரம்பமானது. இன்று ''அகிலாண்ட ஆதிபராசக்தி'' என்னும் பொருளில் உரை நிகழ்த்தப்படும்.

(அ-162)

o o o

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் (சிவன்) ஆலயத்தில் மடைப்பூசை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி. ப. 3 மணி முதல் 6 மணி வரை நடைபெறும்.

[அ-89]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# பிரிட்டன் வழங்கிய உபகரணங்கள்

# யாழ். ஆஸ்பத்திரிக்கு முழுதாக வருமா?

கொழும்பு, ஜூன் 10

பிரிட்டன் அன்பளிப்புச் செய்த பதினைந்து கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு அப்படியே முழுமையாக அனுப்பினால், தீவிரவாதிகளின் யுத்தம் புரியும் சக்திகளை அதிகரித்ததாக முடியும் எனவே இது விடயத்தில் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கூட்டுப்படைத் தலைமையகத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் எச்சரித்திருக்கிறார்கள் என்று ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டிருக்கிறது

இப்போது கூட யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி விடுதலைப் புலிகளாலேயே அனேகமாக நிர்வகிக்கப்படுகிறது.

## தடங்கல் செய்ய கூட்டுப்படை அதிகாரிகள் தீவிர முயற்சி

ஆஸ்பத்திரிக்குத் தேவையான நிதியை நாம் வழங்குகிறோம். வைத்திய உபகரணங்களை அனுப்புகிறோம். அடிக்கடி முடிந்து போகும் மருந்துவகைகளை ஒழுங்காக அனுப்பி வைக்கிறோம். சுகாதார அமைச்சுக்கு நாம் ஆதரவாக இருக்கிறோம் ஆனால் அந்த ஆஸ்பத்திரியை விடுதலைப்புலிகள் நடத்துவது போலத் தான் காரியங்கள் நடக்கின்றன—

காயமடைந்த விடுதலைப் புலிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கென அங்கு வார்ட்டுகள் விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ளன. ஆஸ்பத்திரியைச் சுற்றி ஆயுதம் தாங்கிய புலிகளே காவல் செய்கிறார்கள்— என்றும் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகள் கூறியதாகவும், பிரிட்டிஷ் அன்பளிப்பு உபகரணங்கள் குறித்து ''சண்டே ரைம்ஸ்'' வெளியிட்ட கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்போது கூட, யாழ் ஆஸ்பத்திரி திருப்திகரமான முறையில், வேண்டிய சிகிச்சைகளை அளிக்கக்கூடிய வசதிகளுடனேயே இயங்குகின்றது இந்த வேளையில் அதி நவீன கருவிகளை அங்கு அனுப்பி வைப்பது, தீவிரவாதிகளை பலப்படுத்தி, அவர்கள் எங்களுக்கு எதிராக வலுவுடன் போராடுவதற்கே வகைசெய்யும்— என்று பெயர் குறிப்பிட விரும்பாத கூட்டுப்படைத் தலைமை அலுவலக மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாகவும் அந்தக் கட்டுரையில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசு அன்பளிப்புச் செய்துள்ள வைத்திய உபகரணங்களை வடக்கு-கிழக்கில் மாற்றம் அடைந்துள்ள நிலைவரத்துக்கு ஏற்ப எவ்வாறு பயன்படுத்துவது என்பதை மீளாய்வு செய்ய வேண்டும்— என்று கொழும்பு அதிகாரிகள் கருதுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மீளாய்வு, பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தே இடம்பெறவேண்டும் என்று அறியவருவதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது

அமைதி உடன்பாடு ஏற்பட்டபோது வைத்திய உபகரணங்களை அனுப்புவதாக பிரிட்டிஷ் அரசு உறுதி அளித்தது. ஆனால் வடக்கு-கிழக்கில் மீண்டும் யுத்தம் 1990இல் ஆரம்பமானது. எனினும் முன்னர் அளித்த உறுதிமொழிக்கு இணங்க பிரிட்டனின் வைத்திய உபகரணங்கள் இப்போது தான் வந்து சேர்ந்துள்ளன— என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவற்றுக்கிடையில் —

பிரிட்டன் வழங்கிய வைத்திய உபகரணங்கள் யாழ்ப்பாணத்திற்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் பி. பி. ஸிக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கான உறுதிமொழியை அரச அதிகாரிகள் தமக்கு வழங்கியிருப்பதாகவும் தூதரகத்தினர் கூறியிருக்கின்றனர். (அ-எ-6)

### ஐந்தாவது கட்ட மண்ணெண்ணெய்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் மூலம் குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு ஐந்தாவது கட்டமாக ஒரு லீற்றர் மண்ணெண்ணெயும், ஒரு கிலோ சீனி, அரைக் கிலோ மைசூர்பருப்பு ஆகியனவும் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. (த-162)

### இறைச்சிக் கறி சாப்பிட்டவர்கள் மயங்கினர்!

முதல்நாள் நண்பகல் சமைத்த இறைச்சிக் கறியை மறுநாள் காலை சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர்; உடல் சோர்ந்து மயக்கமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தென்மராட்சியில், கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இச் சம்பவம் இடம் பெற்றது.

பழைய சோறும், பழைய இறைச்சிக் கறியும் சாப்பிட்ட 2 மணித்தியாலங்களில், வாந்தியுடன் தலைசுற்று ஏற்பட்டு இவர்கள் மயக்கமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்தவர்களான சண்முகலிங்கம் கமலசுந்தரி (42 வயது), அவரது பிள்ளைகளான விநோதா (9 வயது), சசிகரன் (6 வயது), குமார் (4 வயது) ஆகிய நால்வருமே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

### மத்திய மாகாண சபையில்

## தமிழ்ப் பாடசாலைகளுக்கு தனியான கல்வி அமைச்சர்

கொழும்பு, ஜூன் 10

மத்திய மாகாண சபையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அமைச்சராக பதவி ஏற்க இருந்த திரு. எஸ். சதாசிவம் தொடர்பான பிரச்சினை, ஜனாதிபதி விஜேதுங்காவுக்கும், அமைச்சர் தொண்டமானுக்கும் இடையே நடந்த உயர்நிலைப் பேச்சைத் தொடர்ந்து சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

தோட்டப்பாடசாலைகளுக்கு மட்டுமே கல்வி அமைச்சராக திரு. சதாசிவம் முதலில் நியமிக்கப்பட்டார்.

அதிகாரங்கள் பறிக்கப்பட்ட இந்த அமைச்சைதான் ஏற்கப்போவதில்லை என்று திரு. சதாசிவம் மறுத்தார். அதனைத் தொடர்ந்து பிரச்சினை ஆரம்பமானது.

இறுதியில் மத்திய மாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூல ஆரம்ப, கனிஷ்ட பாடசாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சராக திரு. சதாசிவம் நியமிக்கப்பட்டார்.

மாகாணத்தில் உள்ள சிங்களப் பாடசாலைகள் முதலமைச்சரின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டன.

இதனைத் தொடர்ந்து திரு. சதாசிவம் கல்வி அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்தார்.

### யாழ். ஆஸ்பத்திரிக்குரிய

## வைத்திய உபகரணங்கள் திருட்டுப் போகும் ஆபத்து!

### பாதுகாப்பற்ற இடத்தில் கொள்கலன்கள்

கொழும்பு, ஜூன் 10

யாழ். போதனா ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் அரசினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 15 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களைக் கொண்ட 25 கொள்கலன்கள் வெலிசறை மார்புநோய் மருத்துவமனைக்கு அருகில் உள்ள அரச மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்குரிய காணி ஒன்றில் கவனிப்பாரின்றி பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் —

கொள்கலன்கள் உடைத்து திருடப்படும் சாத்தியமும் அங்கு நிலவுவதாகவும் ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

சில தனியார் பாதுகாப்பு ஊழியர்களே அப்பகுதியில் காணப்படுவதாகவும் — பெரும்பாலும் அப்பகுதி பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்திய உபகரணங்களில் கமராவுடன் கூடிய புரொங்கொஸ்கோப் (Bronchoscope with Camera) கருவி ஒன்றும் உண்டு.

இலங்கையில் உள்ள ஒரே ஒரு கருவி இதுவாகும் என்றும் — சுவாசம் தொடர்பான நோய்களைக் கண்டறிய இக்கருவி பயன்படுகிறது என்றும் ''சண்டே ரைம்ஸ்'' தெரிவிக்கிறது.

மிக விலை உயர்ந்த நவீன உபகரணங்களும் அவற்றில் உள்ளன

அவற்றில் சில வருமாறு;

★ (Cat Scanning) ஸ்கானிங் யந்திரம் — 26 லட்சம் ரூபா

★ Film Processor) பிலிம் புரொஸஸர் — 23 லட்சம் ரூபா

★ ஈ. ஸி. ஜி. பதிவு செய்யும் சாதனம் — 27 லட்சம் ரூபா

★ இன்டுபேற்றர்ஸ் — 15 லட்சம் ரூபா

★ ஹேமோகுளோபின் மொனிற்றர் 5 லட்சத்து 9,250 ரூபா

★ டீசல் ஜெனரேற்றர்கள் — 25 லட்சம் ரூபா

★ எக்ஸ்-றே கருவி — 8 லட்சத்து 3 ஆயிரம் ரூபா

இவ்விலைகள் சுங்கத் தீர்வையற்றவை என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## சோனியாவின் பாதுகாப்புக்கு மட்டும் 45 கார்கள்!

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்திதான் இந்தியாவின் மிக அதிகமான பாதுகாப்பு வசதிகளைப் பெற்றவர். அவரது குடும்பத்தின் பாதுகாப்புக்கென தனியாக 45 கார்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 22 கார்கள் குண்டு துளைக்காத கவசங்களைக் கொண்டவை.

தமிழ் வார இதழ் ஒன்று இத் தகவலை வெளியிட்டுள்ளது

கறுப்புப் பூனைகள் படையின் ''இஸ்ட் பிளஸ்'' பிரிவு சோனியா காந்திக்கும் அவரது மகன் ராகுல், மகள் பிரியங்கா ஆகியோருக்கும் பாதுகாப்பு வழங்குகிறது.

சோனியா காந்திக்கும் அவரது பிள்ளைகளுக்கும் ஒதுக்கப்பட்ட கார்களில் குண்டு துளைக்காத காரிலேயே அவர்கள் செல்வார்கள். ஏனைய கார்கள் அதன் முன்னும் பின்னும் செல்லும்.

இந்தக் கார்களைச் செலுத்துவதற்காக மட்டும் 66 சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மாறி மாறி கடமையாற்றுவர்.

—இவ்வாறு அந்த வார இதழ் மேலும் தகவல் வெளியிட்டது. (உ-3)

யாழ்ப்பாணம்
மாநகராட்சி மன்றம்
ஆதனவரி அறிவித்தல்

1993ஆம் ஆண்டு 1ஆம், 2ஆம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30-06-1993 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ்வரும் விவரப்படி வெலியாத்துப் பணம் அறவிடப்படுமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | | |
|---|---|---|
| வெற்றுக் காணிகள் மற்றும் — குடியிருப்புக் காணிகள் | — | 15% |
| ஏனைய காணிகளுக்கு | — | 20% |

1993ஆம் ஆண்டு 3ஆம் கந்தாயத்திற்குரிய வரியை 02-08-1993 அன்று அல்லது அதற்கு முன்பாகவும் 4ஆம் கந்தாய வரியை 01-11-1993 அன்று அல்லது அதற்கு முன்பாகவும் செலுத்துவோர் 5% கழிவிற்கும் உரித்துடையவராவர்

காசோலையாகச் செலுத்த விரும்புவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்
யாழ். மாநகரசபை.

1993-06-09. (சி-5233)

G. A. Q.
B. A. Part -I
★ வரலாறு (History) (1—2)
★ மொழியியல் (Linguistics) (2—3)
ஆரம்பம்: 12 06-1993
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-5305)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், தையல் மெஷின், நீரிறைக்கும் இயந்திரம், கிற்றார், ஓகன், வயலின், வீணை, மெத்தைகள், காப்பெற் வகைகள், சிறிய சைக்கிள், கடைக்குரிய கண்ணாடி அலுமாரிகள், கிளாஸ், செரமிக் வகைகள் மற்றும் வீட்டுப் பாவனைக்குரிய பொருள்களும் விற்பனைக்குண்டு. 275, பிரதான வீதி யாழ்ப்பாணம்.
(26044)

### இலவச திருமண சேவை

26 வயது, சித்திரை, செவ்வாயற்ற U.K. Electronic Engineerக்கு படித்த, அழகான, 5 அடி 2 அங்குலத்திற்குக் குறைவான மணப்பெண் தேவை. டபண்ணை அழைக்க ஆவன செய்யலாம். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி.
(26013)

### வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவ நெறி ஆண்டு 8. ஆக்கம்: க. சந்திரசேகரம், கைதடி முத்துக்குமார சுவாமி ம. வி. வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். ஏகவிநியோகஸ்தர்கள் சோதி புத்தகசாலை, மீன் சந்தை முன்பாக பஸ் நிலையம், சாவகச்சேரி.
(சி-5222)

### புதிய வெளியீடு

பாடசாலை மேடைகளில் உங்கள் குழந்தைகள் பேச்சாளராக வேண்டாமா? பாலர் பிரிவிலிருந்து ஐந்தாம் ஆண்டு வரை மாணவர்களுக்கான பேச்சுக்கள், கட்டுரைகளாகவும் உதவும். ''என்னால் பேச முடியும்'' ஆசிரியர் ''கோப்பாய் சிவம்''.
(26031)

### இடமாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
(6245)

### ENGLISH

English Grammar, Literature, Spoken English and TOEFL சகல பரீட்சைகளுக்கும் ஏற்றவகையில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது ஆங்கிலம் பேசுவதற்கும் பழக்கப்படுகிறது. V. N Kandasamy. (ConsultantEnglish Studies) 87, திருநெல்வேலி றோட், (றயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில். (6243)

### கைக்கடிகாரம் யாருடையது?

தென்மராட்சிப் பகுதியில் தாம் கண்டெடுத்த ஆண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்றை கொக்குவிலைச் சேர்ந்த திரு. த பரமேஸ்வரன் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைத் தெரிவித்து அக் கைகடிகாரத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

---

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி**
**பத்மாவதி சொக்கநாதபிள்ளை**

யா வண். நாவலர் மகாவித்தியாலயத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பத்மாவதி சொக்கநாதபிள்ளை அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ வண். நாவலர் மகாவித்தியாலயம்.

(26043)

---

## 8ஆம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்: 10 — 03 — 1921
மறைவு: 08 — 06 — 1985

**அமரர் வே. சி. நடராசா**
(முன்னாள் வர்த்தகரும், மின் எக்த்தொழில் நிறுவன ஸ்தாபகரும்)

திதி; 10—06—1993


எங்கள் அன்பு ஐயா!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து உருண்டோடிய ஆண்டுகள் எட்டு ஆனாலும் உங்கள் பிரிவுத்துயர் எங்களை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்திபெற இந்நாளிலே உற்றமும், சுற்றமும் சூழ பிரார்த்தனை செய்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

26 & 26/1, சிவன் புதுவீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(26025)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 10 — 1936
மறைவு: 03 — 06 — 1991

**க. தியாகராஜா**
(இளைப்பாறிய M. L. T. தெல்லிப்பழை)

திதி: 10 — 06 — 1993

பாசத்தின் திருவுருவே நிலை பாதியிலே
பிரிந்த கதை
வாசமலரைப் போல் மகிழும் பூவைப்போல்
பேச முடியாமல் பிள்ளைகளின் நெஞ்சத்தில்
நேச நினைவுடனே நின் சாந்தி தினம் வேண்டி
ஈசன் அடி போற்றி இறைஞ்சி நிற்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பெற்றோர்.

1ஆம் கட்டை,
உடுவில்.
(26020)

---

## மா, சீனியின் விலைகள் விரைவில் அதிகரிக்கும்?

கொழும்பு, ஜூன் 10

கோதுமை மா, சீனி போன்ற இறக்குமதிப் பொருள்களின் விலையை அரசாங்கம் விரைவில் உயர்த்தக்கூடும். அதே போல மின்சாரக் கட்டணம் உட்பட மற்றும்பல கட்டணங்களும் உயர்த்தப்படலாம்.

விலைகளையும், கட்டணங்களையும் அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளதாக பொருளாதாரத் துறை வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

கொழும்பு அரசின் வரவு - செலவில் துண்டு விழுவதைத் தவிர்க்குமாறு சர்வதேச நாணய நிதியம் அரசிடம் வற்புறுத்தி வருகிறது. ஆனால் துண்டுவிழும் தொகை குறைக்கப்படுவதற்குப் பதிலாக வருடாந்தம் உயர்ந்தே செல்கிறது.

இதனை அவதானித்த சர்வதேச நாணய நிதியம், தான் முன்னர் வழங்குவதாக ஒப்புக்கொண்ட நிதி உதவியின் இரண்டாவது கட்டத் தொகையை வழங்குவதாயின். துண்டுவிழும் தொகை பெருமளவில் குறைக்கப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளது. இல்லையேல் அந்த நிதி வழங்கப்படமாட்டாது என்றும் எச்சரித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் விலை உயர்வுகள், கட்டண உயர்வுகளைச் செய்வதனை விட அரசுக்கு மாற்றுவழி இல்லை எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.
(அ-6)

---

## ஈவ்லின் இரட்ணம் பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்

கருத்தரங்கு: 'இலங்கையின் இனப்பிரச்சினையும் பிரதிநிதித்துவமும்'.

உரை வழங்குபவர்: திரு, அ. குமாரவேலு
வெளிநிலை விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
யாழ்-கல்லூரி.

தலைமை: திரு. ரி. கிருஷ்ணமோகன்
உதவி விரிவுரையாளர்,
பொருளியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,

காலம்: இன்று 10-06-1993 வியாழக்கிழமை
பி. ப. 4 00 மணிக்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- இயக்குநர்.
ஈ. இ. ப. நி.

(சி 5306)

---

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 03 — 05 — 1956
அழிப்பு: 18 — 05 — 1987

**திருமதி**
**ஜெயந்திதேவி யோகேஸ்வரன்**
(ஆசிரியை - கிளிநொச்சி, உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)

திதி: 10 — 06 — 1993

ஆறு ஆண்டுகள் ஆகிமுடிந்ததோ - அம்மாவுன்
அழகு வதனம் கண்டு
உன் மகிழ்ச்சி இழந்ததனால்
உணர்வற்று வாழ்கின்றோம்
ஆசிரிய கடமைக்கு சென்றவுன்னை
ஆண்டவன் ஆனையிறவில் அவதியாய் பறித்தான்
பாசத்தால், நேசத்தால் எம்மிடம்
-பற்றுவைத்தவுன்னை
பறித்தெடுத்தானே இறைவன்
இனி எப்பிறப்பில் உமைக் காண்போம்?

கணவன், பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

கிழுவானை ஒழுங்கை.
கோப்பாய்.
(6242)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### என் மீது குற்றம் சுமத்தாதீர்கள்!

# ரஞ்சன், கொப்பேகடுவை நான் கொல்லவில்லை!!

## முன்னாள் டி. ஐ. ஜி. கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 10

முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா, ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆகியோரைக் கொலை செய்தவன் என்று என் மீது குற்றஞ் சாட்டுகிறார்கள். நான் நிரபராதி எந்த விசாரணையையும் எதிர் நோக்க நான் தயாராக இருக்கின்றேன்.

முன்னாள் பிரதி பொலீஸ்மா அதிபரும் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் கீழ் செயற்பட்ட இரகசிய விசாரணைக் குழுவின் தலைவராக இருந்தவருமான திரு. ஏ. சி. லோறன்ஸ் முன்கண்டவாறு "சண்டே ரைம்ஸு"க்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

திரு விஜேதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதைத் தொடர்ந்து இந்த இரகசிய விசாரணைக் குழு உடனடியாகக் கலைக்கப்பட்டது தெரிந்ததே.

''எனது அலுவலகம் ஆலயம் போன்று இருந்தது 24 மணி நேரமும் அதன் கதவுகள் திறந்து இருந்தன. எனது தலைமையில் செயல்பட்ட ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரிகள் பிக்குகள் போன்று இருந்தனர்'

''இன்று என்னைப் பத்திரிகைகள் மாபியா டாணி கொள்ளைக்காரன் என்றும் கொலைகாரன் என்றும் படம் பிடித்துக் காட்டுகின்றன''—

''22 வயதில் புறக்கோட்டை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நான் பணியாற்றியபோது. அப்போது 17 வயதாக இருந்த திரு. பிரேமதாஸா உள்ளூர் அரசியலில் ஈடுபட்டிருந்தார். அன்றிலிருந்து அவருடன் நான் ஒழுங்காக தொடர்பு கொண்டு வந்தேன்''—

இவ்வாறு 73 வயதான லோறன்ஸ் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

லோறன்ஸைச் சந்திக்க சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் மறுத்துவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது

பிரேமதாஸாவின் தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் இயங்கிய இரகசிய விசாரணைக் குழு ஒரு சட்ட ரீதியான ஸ்தாபனம் என்று அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று லோறன்ஸ் விரும்புவதாகவும்—

அதற்கு அமைச்சர்களைச் சந்தித்து ஆதரவு தேட அவர் முயற்சித்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி விஜேதுங்காவைத் தாம் சந்திக்க விண்ணப்பித்து இருப்பதாக லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

(உ-எ)


# கேள்வி அறிவித்தல்

கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

யாழ். பிரதேச
கல்வித் திணைக்களத்திற்குத்
தேவையான தளபாடங்கள்
வழங்கலும், விநியோகித்தலும்

1. யாழ் கல்வித் திணைக்களத்திற்கும், அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கோட்டக் கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிற்கும் தேவையான கீழ்க் காணப்படும் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும், முத்திரையிடப்பட்ட கேள்விகள் தளபாட விநியோகஸ்தர்களிடமிருந்து 1993 - 07 - 05 ஆம் திகதி காலை 10 00 மணிவரை யாழ். கல்வித் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. கேள்விகள் இத் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இத் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'அலுவலகத் தளபாடங்கள் வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமான கேள்விகள்' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச் சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
3. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 200/-, மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- ஆக மொத்தம் ரூபா 450/- ஐ இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்ற உரிய பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து (172) 1993 - 06 - 28 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் எமது திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேவையான தளபாடங்கள்

01. மாணவர் உருக்குக் கதிரை
02. மாணவர் உருக்கு மேசை
03. பாலர் உருக்குக் கதிரை
04. பாலர் உருக்கு மேசை
05. பரிசோதனைக் கூட ஸ்ரூல்
06. கரும்பலகை தாங்கியுடன்
07. அலுவலக மேசை (சிறியது)
08. அலுவலக மேசை (பெரியது)
09. ஆசிரியர் கதிரை
10. தட்டெழுத்தாளர் மேசை
11. தட்டெழுத்தாளர் கதிரை
12. சிறுவர்களுக்கான இணைப்பு வாங்கு
13. ஆசிரியர் மேசை
14. உருக்கு அலுமாரி
15. மகாநாட்டறை மேசை

- யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1993 - 06 - 08.

(சி-5234)


## வாழைச் சருகு வேலி!

உரும்பராய், ஜூன் 10

உரும்பராய்ப் பகுதியில் மக்கள் தமது வளவு வேலிகளுக்கு வாழைச் சருகுகளைக் கொண்டு வேலி அமைத்து வருகின்றனர்;

கிடுகுகளின் விலை மிகவும் உயர்ந்துவிட்டதனால், மக்கள் இந்த இக்கன முறையை நாடியுள்ளனர்.

(ஓ 154)

## முத்திரை வெளியீடு

கொழும்பு, ஜூன் 10

கூட்டுறவு இயக்கத்தின் பொன்விழாவை ஒட்டி தபால் திணைக்களம் ஒரு ரூபா முத்திரை ஒன்றை வெளியிட இருக்கிறது.

சர்வதேச கூட்டுறவு தினமான அடுத்தமாதம் 3ஆம் திகதி இம் முத்திரை வெளியிடப்படும் என்று அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

## கொழும்பில் கொள்ளை

கொழும்பு, ஜூன் 10

கொள்ளுப்பிட்டியில் உள்ள கூட்டுறவுக் கடை ஒன்றில் இருந்து பட்டப்பகலில் 35 ஆயிரம் ரூபா விற்பனைப் பணம் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டி சென். மைக்கல் வீதியில் உள்ள கூட்டுறவுக் கடைக்குள் கடந்த வியாழன் பிற்பகல் நுழைந்த இருவர் அங்கிருந்த பெண் முகாமையாளரை துப்பாக்கி முனையில் மிரட்டி 'லாச்சி'யில் இருந்த விற்பனைப் பணத்தை அபகரித்துச் சென்றனர்.

(த)

# விகிதாசார முறையில் அமைச்சர்கள் நியமனம்

## தொண்டமானின் கருத்து இது

கொழும்பு, ஜூன் 10

விகிதாசாரப் பிரதிநிதித்துவப்படியே அமைச்சர்களும் நியமனம் செய்யப்படவேண்டும்

அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான திரு. எஸ். தொண்டமான் "சண்டே ரைம்ஸுக்கு" அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர்களை விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் நியமனம் செய்வது நாட்டின் நலனுக்குப் பெரிதும் உதவும் என்றும் அவர் கூறினார்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு 4 லட்சம் வாக்குகள் வரையில் கிடைத்தன என்றும்—

திரு தொண்டமானின் விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலான அமைச்சர் நியமனக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த மூவர் அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர்களாக நியமனம் செய்யப்படும் வாய்ப்பு உண்டு என்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

(உ-எ)

# கான்ஸ்டபிளிடமிருந்து பிஸ்டல், ரி-56 மீட்பு

## கொழும்பில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 10

லைசென்ஸ் இல்லாத துப்பாக்கி வைத்திருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொழும்பு பிளவர் வீதிச் சந்தியில் வீதிச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

அவரைப் பொலீஸார் தீவிர விசாரணைக்கு உட்படுத்திய போது மேலும் ஒரு ரி-56 ரக ரைபிளை அவர் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பிரஸ்தாப கான்ஸ்டபிள் மாகாணசபை உறுப்பினர் ஒருவருடனும், வேறு இரண்டு பேருடனும், ஓட்டோவில் வந்து கொண்டிருந்ததாகவும்—

பொலீஸார் ஓட்டோவை மறித்து சோதனை செய்த போது லைசென்ஸ் இல்லாத துப்பாக்கியை கான்ஸ்டபிள் வைத்திருந்தது தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நால்வரும் கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். கான்ஸ்டபிள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஏனைய மூவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(த)

# 'றோ'வின் செயற்பாட்டிற்கு ஆண்டுக்கு ரூபா 700 கோடி

'இந்தியாவின் உளவுவேலைக்காக செயற்படும் தனிப்பிரிவினர் [றோ] செலவுக்காக ஆண்டு தோறும் ரூபா 700 கோடி செலவிட்டும், அந்தப் பிரிவினரை நம்பமுடியாதுள்ளது.

இந்திய அரசின் உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

மத்திய அரசில் உளவு வேலைகளுக்காக தனிப்பிரிவு இயங்குகிறது. நாட்டுக்கு எதிரான சதிவேலைகளைப் பற்றி உளவு செய்வதுதான் இந்தப் பிரிவினரின் வேலையாகும்.

ஆனால் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி கொலை, பம்பாய்க்குண்டுவெடிப்பு சம்பவம் போன்றவற்றில் இந்த பிரிவு தோல்விகண்டது. இதற்காக இந்தப் பிரிவு மீது பழிக்குற்றச்சாட்டுக்கள் சாட்டப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவையோ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மின்னணுக்கருவிகளையோ நம்பமுடியவில்லை என்று அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவினரின் சேவை ஒழுங்கில்லாததால், பல தனியார் நிறுவனங்களும், தொழில் அதிபர்களும் வெளிநாட்டு உயர்சாதி மோப்ப நாய்களை விலைக்கு வாங்க அரசு அனுமதியளித்துள்ளது என்று அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-3]

# எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பு டி.ஐ. ஜிக்களிடம்?

கொழும்பு, ஜூன் 10

வடக்கு - கிழக்கு எல்லைக் கிராமங்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக பிரதி பொலீஸ்மா அதிபர்கள் (டி. ஐ. ஜிக்கள்) நியமிக்கப்படலாம்.

''சண்டே ரைம்ஸ்'' இத் தகவலை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் பாதுகாப்புப் பிரிவுகளுக்கு பொறுப்பாக பணியாற்றி வந்த பிரதிப் பொலீஸ்மா அதிபர்களான எம். எஸ். குணதிலகா, எஸ். எம். ஆர் சுலைமான் ஆகியோர் இப்போது சிரேஷ்ட பொலீஸ் அதிபர் பணிகளைக் கவனிக்குமாறு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும—

இவர்களைத் தொடர்ந்து பிரதி பொலீஸ்மா அதிபர் தரத்தில் வைத்திருப்பதற்காக பொலீஸ்சேவையில் பாரிய மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும்—

அப்போது பத்து அல்லது அதற்கு அதிகமாக பிரதி பொலீஸ்மா அதிபர்கள் நியமிக்கப்பட்டு, வடக்கு-கிழக்கு எல்லைக் கிராமங்களின் பாதுகாப்புப் பொறுப்பு அவர்களுக்கு வழங்கப்படக்கூடும் என்றும் ''சண்டே ரைம்ஸ்'' தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வை மாவட்ட ஆஸ்பத்திரி

# சத்திர சிகிச்சை கூடத்திற்கு வைத்திய உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 10

வல்வெட்டித்துறைமாவட்ட வைத்தியசாலையில் புதிதாகக் கட்டப்பட்டு பயன்படுத்தப்படாது இருக்கும் சத்திர சிகிச்சை கூடத்திற்குத் தேவையான உபகரணங்களையும், வைத்தியர்களையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வல்வை நகரசபை அபிவிருத்தி சம்பந்தமாக அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு உறுதியளிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் உட்பட அரச திணைக்கள உயர் அதிகாரிகளும், விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. தமிழ்ச்செல்வன், கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை உட்பட விடுதலைப் புலி உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இங்கு எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான மனுக்கள் மற்றும் பிரேரணைகள் கலந்துரையாடலின் போது சமர்ப்பிக்கப்பட்டன. குறிப்பிட்ட பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதியளித்தனர்.

அதிகாரிகளினால் ஏற்றுக் கொண்டு உறுதியளிக்கப்பட்ட விடயங்களில் சில வருமாறு:

★ வல்வெட்டித்துறைக்கு தனியான ஒரு ப. நோ. கூ. சங்கத்தை அமைப்பது பற்றி கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ பாடசாலைகளுக்கு வேண்டிய விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் ஆசிரியர்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

★ வல்வெட்டித்துறை பிரதேச பொதுநூலகத்தை மீண்டும் ஆரம்பித்தல்.

★ மீன்பிடித் தடையை நீக்கவும், கடற்றொழிலாளர்களின் பாதுகாப்பை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கவும் நடவடிக்கை எடுத்தல்.

★ சிறுதொழில், விவசாயம், கடற்றொழில் போன்றவற்றிற்கு வங்கிக் கடன்களை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் பல வருடங்களாக இயங்கி வந்த பாடசாலை பல் வைத்திய சேவை நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்தல்.

★ இரவு வீதி விளக்குகளை நகரசபை எல்லைக்குள் அமைத்தல். (த)

பிரதமர் ரணிலுடன் பேசிய பின்

# ஈ. பீ. ஆர். எல். எவ்வின் நடவடிக்கை தீவிரம்

கொழும்பு, ஜூன் 10

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஈ பி. ஆர். எல். எவ் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவிருக்கின்றது என்றும்—

அதற்காக கொழும்பு, அதன் சுற்றுப்புறங்கள் மற்றும் தென் இந்தியாவில் உள்ள தமது உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களை மட்டக்களப்பு, மன்னார், வவுனியா பகுதிகளுக்கு ஈ. பி. ஆர். எல். எவ் அனுப்பி வருவதாகவும்—

தமிழ் அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். தலைமைத்துவம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தியதாகவும்—

கிழக்கில் ஈ. பி ஆர். எல். எவ் நடவடிக்கைகள் அதிகரிப்பது வடக்கு - கிழக்கு மாகாண சபையை மீண்டும் செயல்பட வைப்பதற்கான முன்னோடியான நடவடிக்கையாக இருக்கக்கூடும் என தமிழ் அரசியல் வட்டாரங்கள் ஊகிப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

கிழக்கு மாகாணத்துக்குச் சென்று அரசியல் நடவடிக்கைகளைத் தொடரும்படி இரண்டு மத்திய குழு உறுப்பினர்களுக்கு திட்டவட்டமான பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது மட்டக்களப்பைச் சேர்ந்த நிவாஸ் என்றழைக்கப்படும் என் நேசராஜா மற்றும் ரத்தினம் என்றழைக்கப்படும் ரி. துரைரத்தினம் ஆகியோரே அவர்கள் ஆவர்.

1990 மார்ச்சில் வடக்கு - கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியாவுக்குச் சென்ற ஈ.பி.ஆர். எல்.எவ். மத்திய குழு உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் விரைவில் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும்—

கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி பேச்சுக்கள் நடத்த அக்கட்சியின் எம். பி. யான சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்தியாவுக்கு விரைவில் செல்வார் என்றும் "சண்டே ரைம்ஸ்" செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

உரும்பராய் இந்துவில்

# மூன்றுநாள் வள்ளுவர்விழா

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் நடத்தும் வள்ளுவர் விழா நாளை 11ஆம் திகதி வெள்ளி முதல் 13ஆம் திகதி ஞாயிறு வரை 3 நாட்கள் உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

வெள்ளி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் முதலாம் நாள் நிகழ்ச்சிக்கு பேராசிரியர் வ. ஆறுமுகம் தலைமை வகிப்பார். உரையரங்கு, கலை நிகழ்ச்சிகள் முதலியன இதில் இடம்பெறும். யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி சிறப்புரை நிகழ்த்துவார். "இனி ஒருவிதி செய்வோம்" என்ற நாடகமும் இடம்பெறும்.

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சியில் "வள்ளுவத்தில் இன்று நாம் தேடுவது" எனும் பொருளில் ஆய்வுரைகள் இடம்பெறும்.

விடுதலைப் புலிகள் கலைப் பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு சேரலாதன் தலைமையில் நடைபெறும் மாலை நிகழ்ச்சியில், உரையாற்றும் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனின் சிறப்புரையும், கவியரங்கும், கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ச்சிக்குப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகிப்பார். 'தமிழர் பண்பாட்டில் வள்ளுவம்' என்ற பொருளில் ஆய்வுரைகள் நிகழ்த்தப்படும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் மாலை 5 30 மணி தொடக்கம் நடைபெறும் நிகழ்ச்சியில் உரையரங்கு, விடுதலைப்புலிகள் அமைப்பு செல்வரதியின் சிறப்புரை, "வள்ளுவனின் அரசியல் இன்றைய நிலைக்கு ஏற்புடையதா?" என்ற தலைப்பிலான பட்டிமண்டபம், கலை நிகழ்ச்சிகள், ந. வீரமணிஐயரின் "வள்ளுவன் கண்ட அரசு" நாட்டிய நாடகம் ஆகியன இடம்பெறும். (ச)

# கோதுமை மா இறக்குமதி விநியோகம் தனியாரிடம்

கொழும்பு, ஜூன் 10

கோதுமை மா இறக்குமதியையும் அதன் விநியோகத்தையும் தனியாரிடம் கையளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி, இவ்வாண்டில் 65 ஆயிரம் மெற்றிக்தொன் கோதுமைமாவை இறக்குமதி செய்ய தனியாருக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

தனியார்துறை கட்டுப்பாடு எதுவுமின்றி மாவை இறக்குமதி செய்து விநியோகிக்கவும் அரசு அனுமதித்துள்ளது.

இப்போது கோதுமை மா இறக்குமதியும் விநியோகமும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் ஏகபோக உரிமையாக உள்ளது.

இதனால் கூ.மொ.விக்கு ஆண்டு ஒன்று சுமார் 4 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது இந்த நட்டத்தை

(7 ஆம் பக்கம் பார்க்க)

# வீடுகளில் நூலகம் வைத்திருக்க எம் மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கவலை

யாழ்ப்பாணம் ஜூன் 10

பல தரப்பட்ட பொருள்களையும் வாங்கிக் கொள்வதில் நாட்டமுள்ள யாழ். மக்கள் தமது இல்லங்களில் நூலகம் ஒன்றை வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ஈழத்துச் சஞ்சிகைகள், நூல்கள், சிற்பம, ஓவியம் சித்தமருத்துவம் புகைப்படக் கண்காட்சியின் நிறைவு நிகழ்ச்சியில் உரை நிகழ்த்துகையில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா மேற்கண்டவாறு கூறினார்.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

திரு. செகராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திரு டிவகலாலா தொடர்ந்து பேசியதாவது—

எழுத்தாளர்கள் தங்கள் பேனாவை மொழியின் வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டும். இக்காலப் பகுதியில் நிகழ்பவற்றை ஆவணப் படுத்தும் வகையில் புதிய ஆக்கங்களை அவர்கள் உருவாக்குவது முக்கியம். அனைத்துக் கலைப் படைப்புகளுமே இவ்வாறே அமையவேண்டும்.

அரச அதிகாரிகள், ஊழியர்கள், புத்திஜீவிகள் அனைவரும் பொதுமக்கள் தேவைக்கு ஏற்றதான செயற்பாடுகளைக் கைக்கொள்ளவேண்டும்.

எமது பரம்பரையாக பராமரிக்கப்பட்டு வந்த சித்த மருத்துவத்துறை போதிய வளர்ச்சிபெறவில்லை. இதில் விஞ்ஞான ஆய்வு ரீதியிலான முன்னேற்றங்களை எட்ட வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும், கிராமியமட்டத்திலும் மூலிகை வளர்ப்புக் குறித்து அக்கறை செலுத்த வேண்டும். மக்கள் ஆங்கில வைத்தியத்தை நாடி ஓடாதவாறு தம்மைத் தேடி வரக் கூடியதான நிலைக்கு இந்த மருத்துவத்துறையை சித்தமருத்துவர்கள் வளர்க்கவேண்டும்.

எதிர் காலச் சந்ததியினர் இத்துறையில் ஆர்வம் கொள்ளக்கூடிய நிலை உருவாக வேண்டும்.

போராடும் ஒரு நாட்டின் வருங்காலம் சுபீட்சமுற அனைத்துத் துறைசார்ந்தவர்களும் பொதுமக்களும் தம்மிடையே உள்ள ஆற்றல்களைப் பகிர்ந்து கொள்வது அவசியம்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு .கா. மாணிக்கவாசகர் உரை நிகழ்த்தினார்.

காட்சிக்கு வைக்கப்பட்ட புகைப்படங்களில் திரு. அ. இராசையாவின் வயோதிப மனிதன் புகைப் படம் முதல் இடத்தையும். இரண்டாவது, மூன்றாவது இடங்களை திரு. க. சசிதரனின் உழைக்கும் கரங்கள், உடைந்த யாழ். புகையிரத நிலையம் ஆகிய புகைப்படங்களும் பெற்றுக் கொண்டன.

இவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் யாழ். அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் வழங்கினார்.

[இ-111]

# குருக்களுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 10

உரும்பராய் மேற்கு ஸ்ரீ பார்வதவர்த்தனி அம்பாள் ஆலய பிரதம குருக்களும், உரும்பராய் வடக்கு பேச்சியம்மன் ஆலய விசேஷ வைபவ காலக் குருக்களுமான சிவஸ்ரீ க. மு. சோமசுந்தரக் குருக்களின் சேவைகளைப் பாராட்டி அண்மையில் நடைபெற்ற விழா ஒன்றில் பேச்சியம்மன் ஆலயம் "வேத சிவாகம ஞானபானு" எனும் விருதினை வழங்கி அவரை கௌரவித்தது. (ஸ)

# இதய அஞ்சலி

03-06-1993 இல் இறைவனடி சேர்ந்த முதுபெரும் கூட்டுறவாளர் வைத்திய கலாநிதி

உயர்திரு

## கதிரவேல் கெங்காதரம்பிள்ளை

அவர்களுக்கு

எமது இதய அஞ்சலி

இன்று யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி முழு ஈழத்திலும் கூட மிகப் பெரியதொரு விருட்சமாகப் பரந்து விரிந்து கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய அங்கத்தவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்கும் அரும்பெரும் சேவையாற்றிவரும் சங்கானைப் ப. நோ கூ. சங்கத்தின் தாய்ச் சங்கமான வலி-மேற்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாசத்தைத் தோற்றுவித்த ஸ்தாபகர்களில் ஒருவராகவும், அதன் செயலாளராகவும், தலைவராகவும் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் அரும் பணியாற்றி அதன் வளர்ச்சியோடு தனது வாழ்க்கையினை இணைத்துக் கொண்ட அமரர் உயர்திரு. க. கெங்காதரம்பிள்ளை அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
சங்கானைக் கிளை.

(26037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## வருகை
## பயன் தர...

வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழு ஒன்று இப்போது யாழ்ப்பாணத்தில் தங்கி உள்ளது. இந்தத் தூதுக்குழுவில் வெளிநாடுகளைச் சேர்ந்த மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் என்போர் அடங்கியுள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும், அதன் மூலம் சமாதானத்தை உருவாக்கவும் வகை செய்யும் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு உதவுவதே தமது பிரதான பணி என்று தூதுக்குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

ஈழப் போர் இரண்டு தொடங்கிய பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெளிநாட்டு சமாதான, நல்லெண்ணத் தூதுக்குழுக்களில் இது இரண்டாவதாகும். "குவேக்கர்ஸ்" அமைப்பின் தூதுக்குழு ஏற்கனவே இங்கு வந்திருந்தது.

தென்னிலங்கையைச் சேர்ந்த பல நல்லெண்ணக் குழுக்களும் இங்கு வந்ததுண்டு.

அசாஜி தேரர் தலைமையிலான பௌத்த குருமார் தூதுக்குழு, தெற்குக் கிறிஸ்தவ மதகுருமார் தூதுக்குழு, வண. சோமா பெரேரா தூதுக்குழு, அங்கிலிக்கன் ஆயர் மேதகு கென்னத் பெர்னாண்டோ தூதுக்குழு என்பன அவற்றில் குறிப்பிடக் கூடியவை.

தெற்கில் இருந்து வந்த தூதுக்குழுவினர் யாவரும் இங்கு வந்ததும் தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல்களை கண்டு வருத்தம் தெரிவித்தனர். இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்றார்கள்.

கொழும்பு சென்றதும் இங்குள்ள நிலைமைகளை தமிழர்கள் படும் அவலங்களை, அரசு அவர்கள் மீது மனிதாபிமானமற்ற முறையில் குண்டு, ஷெல் தாக்குதல்களை நடத்துவதனை, பொருளாதார, போக்குவரத்துத் தடைகளால் மக்களின் நாளாந்த வாழ்க்கை நலிந்து போனதை தென்னிலங்கை மக்களிடம் கூறுவதாகத் தெரிவித்தனர் அரசியல் தலைவர்களிடமும் தெரிவித்து அமைதி நிலைமை தோற்றுவிக்கக் கேட்பதாகக் கூறிப் போயினர்.

ஆனால் இந்தத் தூதுக்குழுக்களின் விஜயத்தினால் தமிழர்களின் நிலைமையில் எவ்வித மாற்றமும் உண்டாகவில்லை. சிலர் இங்குள்ள நிலைமையை தெற்கில் சென்று கூறினார்கள் என்பதை மறைப்பதற்கில்லை. ஆனால் சிங்கள மக்கள் மனதில் பெரும் மனமாற்றம் ஏற்பட்டதற்கான அறிகுறி எதுவுமே இல்லை. அரசியல் தலைவர்களும் அமைதி, சமாதானத்தை உருவாக்குவதில் அக்கறை காட்டியதாகவும் இல்லை.

குவேக்கர்ஸ் குழுவினரின் சமாதான முயற்சியும் இடையில் முறிந்து போயிற்று. இத்தகைய பின்னணியில்—

இப்போது வந்துள்ள தூதுக்குழுவினரால், தெற்கில் மக்களிடையேயும், அரசியல் தலைவர்களிடமும் மனமாற்றத்தை— நியாயத்தை உணர்ந்து கொள்ளும் தன்மையைக் கொண்டு வர முடியுமா?— என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

எனினும்—

தமிழர்கள் தமது வாழ்வுரிமைகளுக்காகத்தான் போராடுகிறார்கள். அவர்களின் கோரிக்கைகள் நியாயமானவை. கொழும்பு அரசு தமிழர்களை அடக்கி ஆள முனைகிறது. அதனால் தமிழர்களின் விடுதலைக்கான உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதமாகக் காட்டுகிறது. — என்ற உண்மைகளை இந்தத் தூதுக்குழுவினர் வெளி உலகத்துக்கு எடுத்துச் சொன்னாலே அது நல்ல விளைவுகளைத் தரும். தூதுக்குழுவினர் அதில் கரிசனையுடன் உழைப்பார்களாயின் அதுவே யாழ்ப்பாண விஜயத்தின் வெற்றியாகி விடும்.

# நெருக்கடியான காலத்தில் கிடைக்கும் யாழ். - வன்னி தொடர்புச் சேவை

## மக்களுக்கு விளக்கக் குறிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் பொதுமக்களின் நன்மை கருதி யாழ் — வன்னி தொடர்புச் சேவை ஒன்று இடம்பெற்று வருவது தெரிந்ததே.

இச்சேவை குறித்து போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு விளக்கமான செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

விவரம் வருமாறு:—

யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்கும் இடையே போக்குவரத்துச் சிரமமையைக் கருத்தில்கொண்டு இச்சேவை செயலகங்கள் யாழ். நகரில் மானிப்பாய் வீதியில்—முன்னைய காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும்—

கிளிநொச்சியில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள கட்டடத்திலும், தகவல் கையேற்கும் கருமபீடம், ஒந்தை சோதனை நிலையத்திலும் வாரத்தில் ஏழுநாட்களும் காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-30 மணி வரையும் மாலை 1-30 மணி தொடக்கம் 5 மணி வரையும் நடைபெற்று வருகின்றது.

இச்செயலகத்தால் தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது சலுகை அடிப்படையில் அமைந்த தகவல்கள். வியாபார நோக்கத்தின் அடிப்படையில் அமைந்த தகவல்கள் எனவும், இவை இரண்டுள்ளும் அடங்காத தகவல்களும் வழமையான தகவல்களாகக் கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

பாரதூரமான நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்திகளும், மரண அறிவித்தல் செய்திகளும் குறிப்பிட்ட மாவட்ட வைத்திய அதிகாரியினால் அல்லது பிரதேச சிற்றூர் பொறுப்பாளர் அல்லது கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்டிருப்பின் இத்தகவல் சலுகை அடிப்படையில் அமைந்த தகவல்களாக கொள்ளப்படும்.

15 இற்கும் மேற்படாத சொற்களுக்கு ரூபா பதினைந்தும் (15) மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா இரண்டும் அறவிடப்படும்.

தத்தமது வியாபார நோக்கத்திற்கான தகவல்களும் கையளிப்போரிடம் இருந்து ஏற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் வியாபார தகவல்கள் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படும்போது முதல் 10 சொற்களுக்கும் ரூபா நூறும் (100/-) மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா பதினைந்தும் (15/-) கட்டணமாக அறவிடப்படும்.

சலுகை அடிப்படையிலான தகவல்களிற்குள்ளும் வியாபார நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட தகவல்களிற்குள்ளும் அடங்காத மற்றைய வழமையான தகவலுக்கு முதல் 10 வரையிலான சொற்களுக்கு ரூபா ஐம்பதும் (50/-) மேலதிகமான ஒவ்வொரு சொற்களுக்கும் ரூபா ஐந்தும் கட்டணமாக அறவிடப்படும்.

மற்றும் தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 72 மணி நேர இடைவெளிக்குள் விநியோகிக்கப்படும் தகவல்கள் சாதாரண கட்டண விநியோகங்களாக எடுத்துக் கொள்ளப்படும். தகவல் பொறுப்பேற்கப்படும் நேரத்திலிருந்து 24 மணிநேர இடைவெளியில் விநியோகிக்கப்படும் தகவல்கள் விரைவு விநியோகமாகக் கொள்ளப்படும். விரைவு விநியோகத்திற்கு, சாதாரண விநியோகத்திற்கான கட்டணத்துடன் மேலதிகமாக 500 ரூபா அறவிடப்படும்.

வன்னிப் பகுதி விநியோகங்கள் கண்டி வீதியை மையமாக வைத்தே விநியோகிக்கப்படும். கிளிநொச்சி நகரத்திலிருந்து 3 மைல்கள் சுற்றுவட்டாரத்தில் உள்ள பகுதிகளுக்கும் குஞ்சுப்பாந்தன் இறங்குதுறை பகுதிக்கும் விநியோகங்கள் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு தகவல்களை கையளிப்போர் அதற்கென உள்ள படிவங்களைச் சரியான முறையில் பூர்த்திசெய்து அலுவலக நேரத்தில் ஒப்படைக்கவும்.

இச்சேவை மூலம் பொதுமக்கள் பயன்பெறும் நோக்குடன் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு இத்தகவலை அறியத்தருகிறது.

(ஓ)

## பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழன் பிற்பகல் 2 மணியளவில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் சைவப் புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறும்.

தமிழீழக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு க. அருண் மாஸ்டர் யாழ். மாவட்ட உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(த)

o o o

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. ந. ஆனந்தராஜ் தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு. சே. பத்மநாதன் கலந்து கொள்வார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். பல்கலைக் கழகம் "உதயன்" நிறுவனத்தின் ஆதரவுடன் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- ஓல்ட் கோல்ட்ஸ் எதிர் சென்றலைட்ஸ் புளூஸ்

★ 4.45 மணி;- பல்கலைக் கழகம் எதிர் ஜொனியன்ஸ்

o o o

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி விளையாட்டுத்திடலில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும்.

17 வயதுப் பிரிவில் யாழ். கனகரத்தினம் ம. ம. வி. அணியை எதிர்த்து யாழ். கன்னியர் மடம் ம. வி. அணி விளையாடும். 19 வயதுப் பிரிவில்: சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். கனகரத்தினம் ம ம. வி. அணி மோதும்

இந்தப் போட்டிகளில் விருந்தினர்களாக யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இ. இராஜரட்ணமும் யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தி. நாகராசாவும் கலந்து கொள்வார்.

o o o

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு குருநகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். இறுதியாட்டத்தில் பாடும்மீன் வி. க. அணியை எதிர்த்து சென். அன்ரனீஸ் வி. க. அணி மோதும்.

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி அமரர் கனகையா ஞாபகார்த்தமாக — ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்தப்படும் — ஆறு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்றும் இறுதியாட்டமும் இன்று மாலை நிலைய மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் அரையிறுதியாட்டத்தில் நல்லூர் ஸ்புட்னிக் வி. க. அணியை எதிர்த்து யாழ். செயலக அணி மோதும்

இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி மாலை 5 மணிக்கு இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய கழக அணியுடன் விளையாடும்.

o o o

யாழ்நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்தி வரும் "செட்-அப்" முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று இரவு 7 மணி முதல் மின்னொளியில் இடம் பெறும்.

அரையிறுதியாட்டங்களில் கே. கே. எஸ். "ஏ" அணியை எதிர்த்து பாரதி "ஏ" அணியும், சென். அன்ரனீஸ் "ஏ" அணியை எதிர்த்து ஆவரங்கால் ... அணியும் மோதும்.

(உ)

## அரசு யுத்த --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தூதுக்குழுவினர் வினாவினர் அப்போதே முன்கண்டவாறு விளக்கமளிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் பேச்சின் ஆரம்பத்தில் தமிழர் பிரச்சினையின் தன்மைகள், தமிழர்களின் அரசியல் அபிலாசைகள், விடுதலைப் புலிகளின் வளர்ச்சி அவர்களின் அரசியல் நிலைப்பாடு, சமாதானத்தை உண்டாக்குவதில் தமக்குள்ள விருப்பம் என்பன குறித்து தூதுக்குழுவினருக்கு மிக விவரமாக எடுத்துரைத்தனர்.

யுத்தத்தை நிறுத்தினால் மட்டுமே பேச்சுவார்த்தை நடைமுறைச் சாத்தியமாகும். யுத்த நிறுத்தம் செய்வதற்குத் தயார் என்று 1991 டிசம்பர் இறுதியிலேயே நாம் அறிவித்து விட்டோம் —

அரசு சமாதானத்திலும், பேச்சுவார்த்தையிலும் நம்பிக்கை வைத்திருந்ததால் அதற்கான சமிக்ஞைகளைக் காட்டலாம் —

★ பொருளாதாரத் தடை போக்குவரத்துத் தடைகளை நீக்குதல்.

★ கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களை நிறுத்துவது.

★ கைதிகள் பரிமாற்றத்தை உரிய முறைப்படி செய்தல் ஆகியன அரசு காட்டும் நல்லெண்ண சமிக்ஞைகளாக அமையலாம். — என்றும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் விளக்கிக் கூறினர்.

அமைச்சர்கள் ஹமீது, தொண்டமான், தயாரத்னா ஆகியோர் அல்லது அவர்களில் ஒருவருடன் செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் சந்தித்துப் பேச விடுதலைப் புலிகள் விரும்புவார்களா — என்று பேச்சின் ஒரு கட்டத்தில் தூதுக் குழுவினர் கேட்டனர்.

அரசு யுத்த நிறுத்தத்தை அறிவித்தால் தாம் அதனைச் சாதகமாக பரிசீலிக்க முடியும் என்றும் —

யுத்தம் நிறுத்தம் செய்து வடக்கு - கிழக்கு அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டால் இங்கேயோ அல்லது மூன்றாவது நாடு ஒன்றிலோ பேசலாம் என்று புலிகள் தரப்பில் பதில் அளிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 5மணிக்கு ஆரம்பமான பேச்சுக்கள் இரண்டரை மணி நேரம் நீடித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், காவற்றுறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன், நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பரா, கல்வித்துறைப் பொறுப்பாளர் திரு இளங்குமரன், யாழ் மாவட்ட தளபதி திரு. அன்பு ஆகியோர் பேச்சில் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டு சமாதானத் தூதுக்குழுவினருடன் யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகமும், கத்தோலிக்க குருமாரும் கலந்து கொண்டனர்.

சமாதானக் குழுவினர் இன்று மாலை கொழும்பு புறப்படுகிறார்கள்.

[அ-உ-5]

## தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இது குறித்து பி. பி. ஸி செய்தியாளர் சியோகோநுவாஸ் தமது கண்ணோட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பெரும்பான்மையான சிங்களர்களுடன் இணைந்து பணிபுரியும் கொழும்பு நகரில் படையினரால் எந்தப் போராளியையும் பிடிக்க முடியவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

## கோதுமை...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவிர்க்கவே தனியார் துறையிடம் கோதுமை மா இறக்குமதி - விநியோகத்தைக் கையளிக்க அரசு முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — அரசு 65 ஆயிரம் மெட்ரிக் தொன் கோதுமை தானியத்தை இறக்குமதி செய்து, அவற்றை பிறிமா மா ஆலையில் இலவசமாக அரைத்து மா ஆக்கி விற்பனை செய்யும் என்று அறிவிக்கப்படுகிறது.

இக் கோதுமை தானியம் அமெரிக்காவின் பி. எல் 480 உதவித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகிறது.

## கிழிக்கப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிருப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் கொழும்பில் படையினரால் கிழிக்கப்பட்டு சோதனையிடப்படும் நடவடிக்கைகள் கடந்த பல மாதங்களாக இடம்பெற்று வந்தன.

அதனைத் தொடர்ந்து இங்குள்ள தபால் உயர் அதிகாரிகளும் மற்றும் அரச அதிகாரிகளும் செய்த முறைப்பாடுகளை அடுத்து கடிதங்களை கிழித்துப் பரிசோதிப்பது நிறுத்தப்படும் என கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர்.

அதன் பின்னர் இரு தடவைகள் இங்கு எடுத்துவரப்பட்ட தபால்கள் கிழிக்கப்படாமல் பத்திரமாகவும் வந்து சேர்ந்தன.

ஆனால் இப்போது மீண்டும் கடிதங்கள் கிழிக்கப்பட்ட நிலையிலேயே வந்து சேர்ந்துள்ளன.

[ஓ-5-17]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராதனை வளாக
## 1993 / 94
## G. A. Q, B. A
வகுப்புக்கள் ஆரம்பம்
11-06-93 வெள்ளி பி. ப. 4.00 மணி
## யாழ். வளாக வகுப்புக்கள்
## G. A. Q, B. A (Part 1)
நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

விவரங்களுக்கு: நிர்வாகி
கலைமகள் கல்வி நிலையம்,
(26047) மீசாலை



## வெளிவந்துவிட்டது!
## இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (S.L.A.S.)
க. பொ. த. (உயர்தரத்) தேர்வுக்குரியது
ஆக்கியோன்
## D. SAM
கிடைக்குமிடங்கள்:-

புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம். (யாழ்)
ஸ்ஃபாரிஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்.
பாரதி கல்வி நிலையம், சித்தன்கேணி
D. Sam, 76/2 கோவில்வீதி, யாழ்ப்பாணம்.
[26050]


# மரண அறிவித்தல்கள்

## இராசரெத்தினம் சிவலோகநாதன்
(அரசாங்க ஒப்பந்தக்காரர்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கண்டியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராசரெத்தினம் சிவலோகநாதன் கண்டியில் 7-6 93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசரெத்தினம் - மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், பிரியங்கா, நிருத்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேந்திரம் - இராசலட்சுமி தம்பதிகளின் (இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்) அன்பு மருமகனும், பரலோகநாதன் (அசோகா வித்தியாலயம் கண்டி), சிவகாந்தரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குலேந்திரன், செல்வராணி, சந்தானலட்சுமி - கைலாசதுரை, சிறிஸ்காந்தன் - சாகினி (சுவிஸ்), லட்சுமிகுமாரி - பாலராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கண்டியில் 9-6-93 இல் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. பேரானந்தன் (மாமனார்)
(999) 535 காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (26048)

அருட்சகோதரி
## மேரி மக்டலின் - தி. கு.

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட் சகோதரி மேரி மக்டலின் அவர்கள் 09 - 06 - 1993, புதன் கிழமை, யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 10 - 06 - 1993, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு திருக்குடும்பக் கன்னியர் மடத்துச் சிற்றாலயத்திலிருந்து ஆரம்பமாகி, யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் திருப்பலியுடன் இடம்பெறும்.

தகவல்:
மாகாணத் தலைவி
திருக்குடும்பக் கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம். (26049)

## திருமதி பத்மாவதி சொக்கநாதபிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியை)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி பத்மாவதி சொக்கநாதபிள்ளை கொழும்பில் காலமானார். இவர் இளைப்பாறிய ஆசிரியர் சொக்கநாதபிள்ளையின் அன்பு மனைவியும், முகுந்தன், சபேசன், தயாபரன், சதாநந்தினி, சடாச்சரம், மால்மருகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (9-6-93) நேற்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சொக்கநாதபிள்ளை (கணவன்)
29, கோபால் லேன்,
யாழ்ப்பாணம். (26052)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 10

நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபை 12 ஆம் வட்டார சங்கிலியன் சுகாதாரக்குழுவினர் ஏற்பாடு செய்துள்ள சுகாதாரக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அந்தக் கருத்தரங்கில் "இருதய வியாதியும் தடுப்பு முறையும்" என்னும் தலைப்பில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் உரையாற்றவுள்ளார். [இ-5]

## விஜய்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபு என்று தெரிவிக்கப்படுகிறது.

பாபாவின் இல்லத்துக்கு அருகில் உள்ள கல்லூரி ஒன்றின் நிர்வாகியாக இவர் இருந்து வந்தாராம்.

இதனிடையில் - அக்கல்லூரியின் அருகில் நேற்று முன்தினம் காலை கண்டெடுக்கப்பட்ட நிலக்கண்ணிகளின் எண்ணிக்கை நான்கு என்று தெரிவிக்கப்படுகின்றது. [இ-எ]

## இலவச...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைக் கூட்டத்திலோ சமர்ப்பிக்கப்படும் என்று ரோய்ட்டர்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் "நெருக்குதல்"களுக்கு அரசு பணிந்து விட்டதை இது காட்டுகிறது என்று அவதானிகள் குறிப்பிட்டனர்.

அரசிற்கும் சர்வதேசநாணய நிதியத்திற்கும் இடையே ஏற்பட்ட இணக்கத்திற்கு அமைய மேற்கண்ட புனராலோசனைகள் உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நலன்புரிச் சேவைகளை வெட்டுமாறு சர்வதேச நாணய நிதியம் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு அழுத்தம் கொடுத்திருந்தது என்றும், ஆனால் பிரேமதாஸா அதற்கு இணங்கவில்லை என்றும் —

அதேபோல புதிய ஜனாதிபதி விஜேதுங்காவும் நலன்புரி சேவைகளைத் தொடரவுள்ளதாக முன்னர் உறுதியளித்திருந்த போதிலும், பின்னர் புனராலோசனைகளுக்கு இணங்கியுள்ளார் எனத் தெரிகிறது என்றும் அரச வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன [ஓ-6]

# மரண அறிவித்தல்

## கனகசபை தாமோதரம்பிள்ளை

சாவகச்சேரி டச் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய நில அளவை அத்தியட்சகர் கனகசபை தாமோதரம்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சௌரியம்மாளின் அன்புக் கணவரும், கணேசன் (Paranthan Chemicals) Dr. சிவபாதம் (Regional Epidemiologist) கனகசபை (I D B) மல்லிகா, சீதா, சாவித்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும். விஜயலட்சுமி, முகுந்தினி, ரதி, சுப்பிரமணியம், குணரத்தினம், பத்மநாதன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 10-06-93 அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி. ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்,
[illegible]
(மகன்)


## மின்னொளியில் கரப்பந்தாட்டம்
## அரையிறுதி, இறுதியாட்டங்கள்
யாழ் நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் நடத்தும்
கரப்பந்தாட்ட (Set-up) சுற்றுப் போட்டியின்
அரையிறுதி ஆட்டங்கள் இன்று
இடம்: ஐங்கரன் விளையாட்டு மைதானம்
(யாழ். நகர் அடைக்கலமாதா தேவாலயம் முன்பாக)
நேரம்: பிற்பகல் 7. 00 மணி
★ கே. கே. எஸ். "ஏ" அணி எதிர் பாரதி "ஏ" அணி
★ சென் அன்ரனீஸ் "ஏ" அணி எதிர் ஆவரங்கால் "ஏ" அணி
இறுதியாட்டம்: நாளை மாலை 6.30 மணிக்கு
கரப்பந்தாட்ட, கிரிக்கெட் (மென்பந்து) சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான
## பரிசளிப்பு வைபவமும்
நாளை இரவு நடைபெறும்
பிரதம விருந்தினர்: திரு., திருமதி மாணிக்கவாசகர் (அரச அதிபர், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்கள்: திரு., திருமதி பாலசிங்கம் [யாழ். மாநகர ஆணையாளர்]
திரு, திருமதி குணராசா [பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்]
திரு. க. முருகநேசன் [செயலாளர், யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு]
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
விளையாட்டு நிர்வாகக் குழு,
[கி/5235] ஐங்கரன் விளையாட்டுக் கழகம்



இணுவில் கந்தசுவாமி கோயில்
## மாம்பழத் திருவிழா
பழனியாண்டவர் உற்சவம்
பிற்பகல் 3 மணியளவில் இணுவை,
கந்தன் ஊஞ்சல் மடாலயத்தில் இடம்பெறும்
அதைத் தொடர்ந்து—
## ★ தெய்வீக இசையரங்கு ★
16 ஆம் நாள் நிகழ்ச்சி
பாட்டு:— திரு. போல் திலகநாயகம்
வயலின்:— திரு. S. கேசவமூர்த்தி
மிருதங்கம்: — செல்வன். K. கண்ணதாசன்
கடம்:— செல்வன். சதா வேல்மாறன்
இளந் தொண்டர் சபையினரும்
[26054] விழா உபயகாரர்களும்



## சாகச நிகழ்ச்சிகள் இன்று
## அன்று !
எம் மண்ணின் மைந்தர்களால்
பல சாகச் செயல்கள் செய்யப்பட்டன
சாதனை புரிந்தவர்கள் மண்ணின்
மீட்புக்காய் மரணித்து விட்டார்கள்
## இன்று !
சாண்டோ M. துரைரத்தினம் அவர்களால்
பயிற்சி அளிக்கப்பட்ட
பொலிகை மண்ணின் மைந்தர்கள்
10 - 06 93 மாலை 5.00 மணிக்கு
கழக மைதானத்தில்
பல வீர சாதனைகள் செய்து காண்பிக்க உள்ளனர்

01. இலங்கையில் இதுவரை காலமும் எவரும் சாதிக்காத,
முள்ளாணி ($\frac{1}{4}$" தடிப்பு 3" உயரமுள்ள) படுக்கையின் மேல் படுத்திருந்து மார்பு மீது உழவு இயந்திரத்தை ஏற்றி சாதனை படைக்க உள்ளார்.
செ. செல்வராஜா

02. அதி பாரங் கொண்ட லொறி ஒன்றை மார்பில் ஏற்ற உள்ளார்
த. தங்கேஸ்வரராஜா

03. தொண்டைக் குழிக்கு மேலாக ஆட்களுடன் கூடிய கட்டை வண்டி ஒன்றை ஏற்ற உள்ளார்.
ப. யோகேந்திரராஜா

04. நெருப்பு புகைக் குழியினுள் 45 நிமிடங்கள்.
செ. ரஞ்சகுமார்

இச் சாதனை நிகழ்வுகளை கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பொலிகை மக்கள்
[26046]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org